செய்திருக்கிறார்கள் என்று எண்ணும்போது இந்த நேரத்தில் அவர்களுக்கு நான் நன்றி செலுத்தாமல் இருக்கமுடியாது. நாம் மக்களுடைமையாக்குவது மக்களுக்கு தெரிந்துவிடாமல் போயிருக்கும். ஆனால் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது ஒவ்வொருவருக்காக புது ரூட்கள் ஏற்படுத்தி தனியார்களுக்கு கொடுத்து நாடு முழுவதும் தெரிகிற அளவிற்கு ஒரு ஏற்பாட்டினைச் செய்து அப்படியும்கூட நமக்கு ஒரு நன்மையைத் தேடித் தந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நாம் அவர்களை மறந்துவிடுவோமேயானால் நாம் நன்றி காட்டத் தவறிவிட்டோம் என்ற குற்றத்திற்கு ஆளாகிவிடுவோம். ஆகவேதான் வரலாற்றுச் சிறப்புமிக்க மசோதா இது என்று எடுத்துக் கூறினேன்.

இந்தியாவிலேயே நாம் கொண்டு வந்திருக்கும் சட்டம், ஒரு புதுமையான சட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முன்னாலே மத்திய அரசிலாகட்டும், இதர மாநில அரசுகளில் ஆகட்டும், அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டங்களில் எல்லாம் வழித் தடங்களை மட்டும்தான் எடுத்துக் கொள்வார்கள். ரூட்டை மட்டும்தான் எடுத்துக் கொள்வார்கள். இந்தச் சட்டத்தின் மூலம் நாம் அந்தப் பேருந்துகளையும் எடுத்துக்கொள்கிறோம். அந்தப் பேருந்துகளில் அன்றாடக் கூலிகளாக, ஆதரவு அற்றவர்களாக, நிலையில்லாதவர்களாக வாழ்கிற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களையும் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு வாழ்வில் ஒரு நிம்மதி கொடுக்கவும் இந்தச் சட்டத்தின்மூலம் வகை செய்யப்பட்டுள்ளது. ஆகையால்தான் இந்தச் சட்டம் இதுவரையிலும் எந்த மாநிலத்திலும் கொண்டு வரப்படாத, கொண்டு வர முடியாத ஒரு அருமையான, புதுமையான சட்டம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆதிக்கம் எங்கேயிருந்தாலும் அது அகற்றப்படவேண்டும், ஆதிக்கம் அற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம் என்பதை திராவிட முன்னேற்றக் கழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் செயல்படுத்தி வருகிறது என்பதற்கு சான்றாக, எடுத்துக் காட்டாக இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முதலில் தொடங்கிய போராட்டம் 'மும்முனைப் போராட்டம்'. இந்தச் சட்டத்தின் மூலம் முதலாளித்துவத்தை எதிர்த்து நாம் மும்முனைகளில் போராடுகிறோம். முதலாளித்துவத்தை இனி

வளர விடக்கூடாது என்பதற்காக புதிய ரூட்டுகளை, வழித் தடங்களை இனி யாருக்கும் புதிதாகக் கொடுப்பது கிடையாது என்ற முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது. இது முதல் கட்டம். வளர்ந்துவிட்ட முதலாளித்துவத்தை குறைக்க வேண்டாமா என்று எண்ணுகிறபோது, அது இரண்டாவது கட்டமாக இருக்கிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட வழித் தடங்களுக்கான அனுமதியை இனி புதுப்பிப்பது இல்லை என்பதாகும். இதை அழிக்க வேண்டாமா என்று நீங்கள் கேட்பீர்களானால் அது மூன்ருவது கட்டமாக வருகிறது. அதற்காகத் தான் மாவட்டத்திற்கு மாவட்டம் அந்தப் பயணிப் போக்குவரத்தை அரசு மேற்கொள்ளுகிறது. ஆகவே, இந்தச் சட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், தமிழக அரசைப் பொறுத்தவரையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் ஒரு பெரிய மும்முனைப் போராட்டம், முதலாளித்துவத்தை தடுக்கும் ஒரு பிரிவாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இவ்வளவு சிறந்த முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட இந்தச் சட்டத்தில் நீண்ட விவாதத்திற்கு இடம் இருக்காது என்று நினைக்கிறேன். ஏனெனில் எல்லா அரசியல் கட்சிகளும், சுதந்திராக் கட்சி உள்பட, பஸ்கள் தேசிய உடைமையாக்கப்படவேண்டும், அந்தப் பயணப் போக்கு வரத்து மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய வகையில் அமைய வேண்டுமென்ற வகையில் ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள்.

அது மட்டுமல்ல, சென்ற சட்ட மன்றக் கூட்டத் தொடரில் இதுபற்றி விரிவாக விவாதித்து இருக்கிறோம். ஆகவே ஏன் தேசியமயமாக்க வேண்டு மென்ற கொள்கையில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்கத் தேவை யில்லை. ஆனல் எப்படிச் செய்வது என்பதில் சில ஆலோசனைகளைச் சொல்ல மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இடம் உண்டு. ஆனல் எப்படிச் செய்வது என்பதில் ஆரம்பித்துவிட்டு, ஏன் செய்தோம் என்ற நிலைமைக்குக் கொண்டு போய் விடக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக நாம் மக்கள் உடைமையாக்குவது என்ற காரணமே, மக்கள் நன்மையை மதித்து, புதிய வழித்தடங்களை அதாவது வருவாய் வராது என்று தெரிந்திருந்தும், மக்கள் நன்மைக்கருதி போக்குவரத்து வசதிகளைச் செய்வதற்கும், கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி செய்வதற்கும், அதே நேரத்தில் சமுதாயத்தில் புற்று நோயாக இருக்கும் கருப்புப் பணத்தை தடுப்பதற்காகவும், ஒழிப்பதற்காகவும். பாட்டாளிகளைப் பாதுகாப்பதற்கும்,